ஆண்டவர்துணை.

மகாமகிமை பொருந்திய நாகூர் ஷாகுல் ஹமீதொலி

ஆண்டவரவர்கள் கந்தூரி கூடு வழிநடை

அமுர்த ரஸக் கீர்த்தனை.

இஃது

காரைகையைச் சார்ந்த குருச்சியில் வசிக்கும் சோதிடம்

ரே. ராமகிருஷ்ண தாசரவர்கள் குமாரர்

இரத்தினசாமி தாசரால் இயற்றியது.

கீவளூர் சக்கரவர்த்தி அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர்டு] 1929. [விலை அணா 1

காப்புச் செய்யுள்.

வெண்பா.

சொற்கருணை வாரிதியே! தொண்டனே னின்புகழை
நற்கீர்த் தனையா னவில்வே—அற்புதமாய்ச்
சந்ததமும் நாகூர்வாழ் ஷாகூ லமீதாலியே!
சிந்தை மகிழ்ந்து துணை செய்.

திருநெல்வேலி ஜில்லா தென்காசித் தாலுகா சேர்ந்தமரம்
ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ M. S. முத்தையா புலவர் அவர்கள் இயற்றிய

சாற்றுக் கவிதை.

அறுசீர் விருத்தம்.

கன்னலொடு செந்நெல்வளர் குருச்சிவளம் பதியதனில்,
கனிவாய் நாளும்
தன்னிகரிற் சோதிடஞ்சொல் தகுராம கிருஷ்ணதா
சரியின் பாலன்
மன்னர்புகழ் திடமிரத்தின சாமிவேள் கீர்த்தனையிம்
மாநி லத்தில்
சொன்னயமும் பொருணயமும் இன்னிசைகற் பனைநிறைந்து
துலக்குந் தானே

அவையடக்கம்

எண்சீர் விருத்தம்

வாரிசூழ் வையகத்தில் விளங்கும் நாகூர்
வள்ளலென வந்துதித்து மகிமை யோங்கி
ஆரிருள்போல் வரும்பிணியை யகற்றும் ஷாகுல்
அமீதுகத் தூரியின்கீர்த் தனையைக் கல்விச்
சாரமதை யறிந்துமறி யாமற் சொன்ன
தகைமைதனில் பிழையிருந்தால் தள்ளி யன்னம்
நீரதனைப் பிரித்தமுதம் பருகு மந்த
நேர்மைபோல் குணங்கொள்வர் நிகழ்த்தி மேலோர்

சிந்து பின்முடுகு துக்கடா மெட்டு.

பல்லவி

மனமகிழ்வுடன் அதிதுரிதமாய் எனது கண்மணி நடந்துவா
நாகூர்கந்தூரி பார்க்கலாம் நன்மார்க்கமாய்
நாகூர் கந்தூரிபார்க்கலாம்

மகிழும் சாசியோடி நீ கனிவுடன் கங்கையாடி நல்ல
சதமெனவவர் பதமதை யினி கெதியென மனம் நாட்டியே
மகிழ்வாய் ஒட்டியாணம் பூட்டியே (மன)

ஆபரணங்கள் பூட்டி என் அழகுள்ளசீமாட்டி வாசம்
அலங்கிர்தமுடன் துலங்கு முல்லையின் அரும்புகொண்டை
ஆசையனைத்துங்கூட்டியே (மன) [யில் சூட்டியே—உன்

கவன முடனே பெண்ணே நீ நடவடி எந்தன் முன்னே இந்தப்
படி தனிலதி திடமுடன் உயர் வடிவுள கொடி தன்னையே
வாராய் பார்க்கலாமுன்னையே (மன)

குருச்சிவாழ் அபிராமி திருச்சூலமும் அமர்வாமி நல்ல
குதுகலமொடு மனம் நிறையவள் பதமது தாக்கோரியே
கூடிவருவாய் பாரியே (மன)

நிர்த்தணமங்கலஞ் சேரு நின்று நேருஞ் சன்னதி பாருதுதி
நிலமதிலுயர் அருள் பெருகியே நிறையும் விஸ்வநாதரே
நேரும் விசாலாக்ஷி பாகரே (மன)

கடுகையாறு கரையேறி நீ கடுகவே செட்டிச்சேரி தனில்
கனதனவான்க ளதிபுகழ்குளம் கருணை சத்திரம் பாரடி
கருதைவேலிவந்துசேரடி (மன)

எழுபத்திினி வாலே அவர் இருக்கின்ற கோவில் சாலை ஓரம்
இனிததிசய முருமவர் செய லெடுத்துரைத்திட நாவினால்
என்னாலாகுமோ பாவினால் (மன)

பத்தினியாள் பதம் வேண்டி எதிர்பாப்பா ஊரிதுதாண்டி இதில்
பல கல்முயர் தலம் இதிலமர் பகரும் பாதுஷாபள்ளியே
பக்கங்களெங்கும் கள்ளியே (மன)

எங்கும புகழ் பிரகாசன் பக்கமிருக்கின்றார் கடம்பேசன்
மகிழ்கிழ் கெட புகழ் பெருகிட அவரினியபாதத்தை வேண்டியே
யெதிராய் டெப்போவு தாண்டியே (மன)

வந்தோமே அந்தணப்பேட்டை மிகச் சுந்தரமாமிந்தகோட்டை
ஜனத்திரள் துகைதுத் ஏதுகிளம்பிடு துன் மனமகிழ் பொங்குமே
ஒய்யார மானத்தங்கமே (மன)

கடல் இடி புயல் போலே வரும் டிரையின் புகைகள்முன்னிலே
இதில் கனஜனத்திரள் எதுவும் போகுது கனிவுடன் நடமுன்னமே
காண்போம் மகுத்துவம் இன்னமே (மன)

தெரிகிற நகர் நாகை கால் எரிகிற தென்ன மாய்கை
சற்று இருந்து நிழலில் ஜலம் அருந்தியே பொருந்தி
எனக்கு முன்னுகநாடுவாய் (மன) [தாம்பூலம் போடுவாய்

வனசாக்ஷி என்றமெட்டு.

(பல்லவி.)

திருநாகை க்ஷேத்திரமடியிது (திரு)

அனுபல்லவி.

மிகத்திருவுலாவும் மேலக்கோட்டை வாசலிது (திரு)

சரணம்.

பந்தல் சிறப்புகளும் பார் வெகுவாக
பக்தஜனங்கள் கோஷ்டி விதவிதமாக
விந்தைமிகுந்த விசித்ரலோகத்தின் மேலாக
விபரங்காணு மிகவுந்தோணுஞ் சுருதிபேணுஞ் சுகிர்தம்பூணுந் (தி)

எங்கும் தமிழ் மறையினிசைகளின் காட்சி
இஷ்ட வரங்கள் தரும் நீலாய தாக்ஷி
தங்குஞ் சன்னிதிதனில் தான்பணிந்திட காட்சி
தருவாள் எதிராய் வருவாள் [illegible] [illegible]
[திரு]

பெரியகடை வீதியின் ஜனங்களின் முந்தி
பெனியாவரசன் பள்ளி நாளதில் சந்தித்
திலகும்தங்க ரதமும்கொடியுடன் பக்தி
இனிமைகூரு எதிரேசேரு கனிவாய்ப்பாரு களிப்பாய்தேரு (திரு)

சுத்தமாகிய தண்ணீர் பைப்பிதில் நாடி
தோழி ஜலமருந்தி ஜனத்துடன் கூடி
பத்தியாகிய ரெத்தின தாசன் பதத்தை பாடி
பணிவாய் நடக்கத் துணிவாய் கதம்பம் அணிவாய் மகிழ இனிதா
[யமையும் (திரு)

மயிலே வடிவேலனேடேதிர் வாவா என்ற மெட்டு.

ஓயிலேகிறை மாமயிலே நீபோராய்
திரளான சேனை திகழ் பெறும் யானை
திக்குகளெங்கும் சேரொளி எங்கும் பொங்கும் (ஓ)
அதிர்வெடி குண்டு அவிடன் பியாண்டு
அழகு பெரு கியாக்லேட்டு மத்தாப்பு (ஓ
மேளங்கள் பேரிதாளங் கச்சேரி
மேவியே இசைபாடும் சந்தனக்கூடும் (ஓ)
கொடி கோடா கோடி ரயிலடி நாடி
[illegible]தடி ஜோக்கு செட்டிப் பல்லாக்கு (ஓ)

வேறு சந்தம்.

[illegible]கேற்ற டங்காக்காரன் என்ற மெட்டு.

ஓடிவருங் கப்பல் கோடி. நேரில் பாரடி.
அதிஅலங்காரம் பாரடி.
நபிகள் சிங்காரம் பாரடி.
இந்த உலகினிலிந்த வேடிக்கைபோல் யார் காண்பாரடி.(ஓடி)

தோகையரு.

பக்தபாசத்தினுல் படுந்துயர் தீர்த்திட்ட பாகமதாக்
இந்த ஊர்தனில் வேண்டுதல் காரர்கள் செய்திடும் விநோதமதை

பாட்டு.

எந்தன் ஒரு நாவினுல் சொல்லக் கூடுமோ
சொன்னுல் இகத்தைத் தேடுமோ
மனத்தில் கவலை நாடுமோ அடி
எந்திழையே அவரருளால் இடர்கள் சாடுமோ

தோகையரு.

கொடியூருகாலமே படிமீதில் ஓலமே படிக்கிளம்பி
கெடியாக நாகையைச் சுற்றியே வெளிப்பாளையம் வந்ததடி

பாட்டு.

கிடுகிடென வதிர்முழங்கிட கோர்ட்டு யாரடி
நாகூர் போகும் ரோட்டி தானடி
வருகுது மோட்டாக் காரடி மிகுந்த
கிருபை தோகத்தீஸ்வரர் பதஞ் சரணங் கோரடி

தோகையரு.

அரிபுசாயுபு பள்ளி எதிராக தெரிசித்து
அருள் தருக வெனத்துதித்து அன்னமே
வடகுடியின் சத்திரமது தாண்டியே
ஒரம்பேதாவியின் பதம் வேண்டியே

பாட்டு.

அமைத்த வெள்ளரிக்காயின்மண்டபமதைக் கடந்தோமே
அருமைப் பதந்துடர்ந் தோமே
ஆச்சரியமாய் கடந்தோமே
இதோ அழகு லெகூத்தோப்பு பார்ப்பனச்சேரி வந்தோமே

தோகையரு

எங்கெங்குந்தங்க மயமாகவே விலங்கிடும்
எழில்மகர தோரணங்கள் இசைமேள
தாளமுடன் நடனசங்கீதங்கள் எண்டிசைகள் தானதிரவே

பாட்டு.

வடவரை யதிரிடக் கொடியுடன் சடமகிழ்வாக
வந்தோமே வெகுதிடமாக பந்தல்கள் தடபுடலாக
சிங்காரஞ் செய்தழகாக இருப்பதை
வான்புவியோர் தான் மகிழ்ப்பார் வெகுவாக

வள்ளிதெய்வானை மணவாளனே என்ற மெட்டு.

வந்தோம் இதையமகிழ்வாகவே நாகூர்
மணாரு தெரியுதழகாகவே
சந்தமிகப் பெருக ஷாகுலருள்வருக
தானேஉரைப்பேனேமிகநானேயினிதேனேயிதோ (வந்)

அண்டமளா வித்திசை யெட்டுமே கொடி.
அன்பர் மனந் தெளிய காட்டுமே
கண்டோர் வினை யொழியுங்கருணை மிகப்பொழியும்
காலே அருளாலே புவிமேலே முன்னாலே இதோ (வந்)

பள்ளிபிதன் பெருமை சோதியும்வந்து
பணிந்துபாத்யா மிகஓதியும்
கள்ளந்தனைப்போக்கி நல்ல கதிநோக்கி
காசாய் மனந்தோய் களிகூராய் இனிநோய் இதோ (வந்)

எங்கும் ரத்ன தீபவொளி சாடியும்—பக்கம்
இலகும்மதி நிகர்க் கண்ணாடியும்
இன்பம் மிகத்தரும் எம்மைக்கருள் தாரும்
இறையே கலங்கரையே உயர்மறையே யினி
உரையே யெவ (வந்)

இந்திரலோக சந்திரகிரி என்ற மெட்டு.

கோமளமே கொடியுடனே கூடி—நாகூர்
கோலுவதை நாமும் பின்னல் நாடி.

ஷாகுல் கீர்த்தியை உலகத்தில்கொண்டாடி—பதம்பாடி
இதந்தேடி ஜனக்கோஷ்டியதைச் சாற்றிடு வேண்டி

வஜ்ரமணி உபச்சிதக்கால் நாட்டி எங்கும்
மாணிக்கவைடூரியத்தால் தீட்டி நீல
வரிசைகளால் ஆணிகளும் மாட்டி
மேலேகோட்டி கொடிகாட்டி
யொளிர் மரகத கோமேதகமும் பூட்டி

தாருலாவும் வாழைகளை கட்டி
தங்கத்தர்ல வட்டம் வானுலாவ நீட்டி
சித்ரச்சாலர் ரஜகுண்டுகளு மாட்டி
ஜீன்கள் கள்பூட்டி மகான்கள் பேட்டி
ஜக சோதி யொளி சூரியன்போல் காட்டி

எங்குங் கடைவீதியலங்காரம் பாராய்
குங்குமங்கஸ்தூரிகளின் சேரும்
மிகு மங்கள சாம்பிராணி வாசஞ் ஜோரும்
வெகு சீரும் இது நேரம் வரும் மாமலர் களை
அநேக பாரம்

பாவிடும் பக்திமான்களின் கூட்டம்
சுற்றும் பார்மகிழ் சிங்காரவனத் தோட்டம்
எங்கும் பாரடி புறாக்களை எதேஷ்டம்
மயில் ஆட்டம் குயில் நாட்டம் ஜன்ம
பாழ்வினைகளை நபியால் ஓட்டம்

சீனிவாரி
சர்க்கரைக்கற்கண்டு
அவல் சாதவகை தன்னை பரிமாரி (நல்ல)
சந்தனசாம்பூல மதி மாரி
தனைத்தேரி மகிழ்கோரி வருந்தே
சாது ஜனமேபெருகிச் சாரி

பக்க மெல்லாம் பதும்ம மலர் — ஜெண்டு கேச
பாலருங் கவரிகளைக் கொண்டு — வீச
பாவலர் மகான்கள் களிப் — புண்டு
மகிழ்கொண்டு எங்கும் — நின்று
அவர்பாடிடுஞ்சங்கீதவகை — கண்டு

நாகசுர மேளதாளந்தொனிக்க — வெகு
நளினமாக நடனமாதர் நடிக்க — மிகு
நாதவேதமே கவிகள் — படிக்க
நகரா ஒலிக்ககள் — களிக்க
நன்மை காளுமே பெருகிகுலந் — தழைக்க

திருவுற்றிலகு கங்கை என்றமெட்டு.

அகிலமிகமகிழ இலகுந்திலகம் நமக்கருளும் மகிமை தரும்தாயனே
மிககிருபை தனிர்வுற்ற — சகாயனே
எந்தன் அகமீதினிலுறு வேதனையணுகாமலே மிகநீக்கிடும்
அறிவேகுருவாய் வந்த — வாகனே—காகு.
தருகர தனிலமர்ந்த — யோகனே
சரணம்மிகவடைந்தேன் தருணங்கருணை செய்து
தமியேனையாண்டிடும் நீருமே அருள்மீதொளியே தந்தாளுமே
உலகனை வோர்களும் உனையேகதி எனவே அவர்வினை போக்கிடும்
அரசேயென்னையுன் கண்ணால் — பாருமே
ஜன்ம பிணியை தாத்தி ஞானக் — காருமே
ரதங்கள் தாகஜங்கள் — சதங்கொள்சைனியங்கள்
நிறங்கொள்சார்ந்மன்னர் நீதியும் — அவர்
உறங்கொள்ரேக்காயுளுஞ் சோதியும் — நிலை
நிலையாகவே அல்லாருநி மதியோனிரவியும்வானினில்
நிகழும் வரையில் வாழி — கோருமே
எந்தன்வறுமை யகலக்கண்ணாலும் — பாருமே
பணிபுரிந்தினம் முறைத்தகனியும் இனிதாய்க்கொள்ளும்
பலமுயர் புலவரும் வாழியே—யான் அனியுங்கலைவடி வாழியே
கல்விப்[illegible]வறவேவளர் குருவும்திரு வயர்வுநதரும்
ப[illegible]டு — வாழியே—எங்கும்
[illegible]சங சங்கீதங்[illegible] — வாழியே

முற்றிற்று.



PRINTED AT THE
CHAKRAVARTHI PRESS,
KIVALUR, hme 29.

